**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 81** **நாள் : 10.07.2017**

**பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இணைந்து வழங்கும் ‘‘புதுமைப் பள்ளி திட்டம்’’ பயிற்சி வகுப்புகள் சென்னைப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்பட உள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையுடன் பிரிட்டிஷ் கவுன்சில் என்கிற நிறுவனம் இணைந்து 3 ஆண்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ‘‘புதுமைப் பள்ளி திட்டம்’’ துவக்கப்பட்டது. இத்திட்டம் கடந்த 2015–ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் அனுமதி பெறப்பட்டு, சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது.

புதுமைப் பள்ளி திட்டத்தின் நோக்கமானது, 9, 10, 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களிடையே 21ம் நூற்றாண்டு திறன்களை (21st Century Skills) வளர்ப்பதேயாகும். இந்தப் பயிற்சிகளின் மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே தலைமைப் பண்பு, சிக்கலான சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் திறமை, டிஜிட்டல் எழுத்தறிவு, பாலின சமபங்கு, அறிவாற்றல் திறன்கள் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் போன்ற திறன்கள் வளர்க்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் 70 சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள 70 தலைமையாசிரியர்கள், 136 ஆசிரியர்கள் மற்றும் 204 மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. 136 ஆசிரியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 21 ஆசிரியர்கள் புதுமைப் பள்ளி திட்டத்தின் ஆசிரியர் பயிற்றுநர்களாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். 204 மாணவர்களுக்கு Club leaders Workshop என்கிற பயிற்சியின் மூலம் பள்ளிகளில் மாணவர் குழுக்களை அமைப்பது மற்றும் செயல்படுத்துவதற்கான பயிற்சிகள் கடந்த ஆண்டு அம்மா அரங்கத்தில் நடைபெற்றது.

பிரிட்டிஷ் கவுன்சில் ‘‘புதுமைப் பள்ளி திட்டத்தின்’’ கீழ் 70 தலைமையாசிரியர்கள், 136 ஆசிரியர்கள் மற்றும் 204 மாணவர்களுக்கு முதலாம் ஆண்டில் (2015–16) 15 நாட்களும், இரண்டாம் ஆண்டில் (2016–17) 17 நாட்களுமாக பல்வேறு வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மூன்றாம் ஆண்டிலும் (2017–18) இதுவரை 5 நாட்கள் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளது.

மேலும் கடந்த ஆண்டினை போலவே, புதுமைப் பள்ளி திட்ட (Club Leaders Workshop) பயிற்சி வகுப்புகள் 70 ஆசிரியர்கள் மற்றும் 140 மாணவர்களுக்கு 4 நாட்கள் அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சியானது, 11.07.2017 மற்றும் 12.07.2017 ஆகிய தினங்களில் உதவி கல்வி அலுவலர்கள்–1, 2, 3, 4 மற்றும் 5 ஆகியோரின் மேற்பார்வையில் உள்ள பள்ளிகளுக்கு எம்.எச். ரோடு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 13.07.2017 மற்றும் 14.07.2017 ஆகிய தினங்களில் உதவி கல்வி அலுவலர்கள்–6, 7, 8, 9 மற்றும் 10 ஆகியோரின் மேற்பார்வையில் உள்ள பள்ளிகளுக்கு நுங்கம்பாக்கம் சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற உள்ளது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**